செய்தி வெளியீடு எண்:687 நாள் :21.12.2015

<u>**செய்தி வெளியீடு**</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (21.12.2015) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் திரு.எஸ்.விஜி அவர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.டி.டி.ஸ்ரீனிவாசராகவன் அவர்கள் ஆகியோர் 3 கோடியே 35 லட்சம் ரூபாய்.

2. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.கே.ஆச்சார்யா அவர்கள் 2 கோடியே 50 லட்சம் ரூபாய்.

3. டி.வி.சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணை மேலாண்மை இயக்குநரும், டி.வி.எஸ். லாஜிஸ்டிக்ஸ் (TVS Logistics) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான திரு.ஆர்.தினேஷ் அவர்கள் மற்றும் ஸ்ரீசக்ரா டயர்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. பி. விஜயராகவன் அவர்கள் ஆகியோர் 2 கோடியே 50 லட்சம் ரூபாய்.

4. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.மிலிந்த் ஏ காரத் அவர்கள் (Thiru. Milind A Kharat) 2 கோடி ரூபாய்.

5. ஆம்வே இந்தியா எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு அன்ஷு புத்ராஜா அவர்கள் (Thiru. Anshu Budhraja) 2 கோடி ரூபாய்.

6. டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் திரு.டி. வெங்கடேசன் அவர்கள் மற்றும் துணை செயல் இயக்குநர் (Corporate Affairs) திரு பி.சுந்தரராஜன் அவர்கள் ஆகியோர் 1 கோடி ரூபாய்.

7. எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் திருமதி சரோஜ் கோயன்கா அவர்கள் (Tmt. Saroj Goenka) மற்றும் எக்ஸ்பிரஸ் அவென்யு & எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா சிங்கானியா அவர்கள் (Tmt. Kavitha Singhania) ஆகியோர் 1 கோடி ரூபாய்.

8. KALS டிஸ்டலரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.வாசுதேவன் அவர்கள் 1 கோடி ரூபாய்.

9. போத்தீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ்.ரமேஷ் அவர்கள் 1 கோடி ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 16 கோடியே 35 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (21.12.2015) அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 161 கோடியே 30 லட்சத்து 29 ஆயிரத்து 961 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 21.12.2015